RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை மலர்-5 இதழ்- 2 ஜனவரி.6 2026 செவ்வாய்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ. 5



## பள்ளிகள் திறந்தாலும் போராட்டம் தொடரும்: இடைநிலை ஆசிரியர்கள் திட்டவட்டம்

சென்னை, ஜன.6-

அரையாண்டு விடுமுறை முடிந்து பள்ளிகள் ) திறக்கப்படும் நிலையில், கோரிக்கை நிறைவேறும் வரை போராட்டம் தொடரும் என்று இடைநிலை ஆசிரியர்கள் அறிவித்துள்ளனர்.

சம வேலைக்கு சம ஊதியம் கோரிக்கையை முன்வைத்து இடைநிலை பதிவு மூப்பு ஆசிரியர் இயக்கம் (எஸ்எஸ்டிஏ) சார்பில் தொடர்ந்து போராட்டம் நடைபெற்று வருகிறது. 10வது நாளாக ஆசிரியர்கள் தங்கள் குடும்பத்தினருடன் சென்னை சிவானாந்தா சாலையில் மனித சங்கிலி போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர்.

அரையாண்டு விடுமுறை முடிந்து பள்ளிகள் இன்று திறக்கப்படவுள்ள நிலையில், கோரிக்கை நிறைவேறும் வரைபோராட்டம் தொடரும் என ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து எஸ்எஸ்டிஏ பொதுச்செயலாளர் ஜே.ராபர்ட் கூறும்போது, ''எங்கள் கோரிக்கை நிறைவேற்றப்படும் வரை போராட்டம் தொடரும். பள்ளிகள் இன்று திறந்தாலும் பின்வாங்கும் எண்ணமில்லை. மாறாக மாவட்டத் தலைநகரங்களிலும் இன்று முதல் போராட்டங்களை நடத்த இருக்கிறோம். எங்களுக்கு ஆதரவாக பெற்றோர்களும் போராட்டத்துக்கு வருவார்கள். எனவே,தமிழக அரசு எங்களை அழைத்துப் பேசி கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும்.

ஓய்வூதியத்தில் முரண்பாடு: முதல்வர் அறிவித்துள்ள புதிய ஓய்வூதியத் திட்டத்தை நன்றியுடன் வரவேற்கிறோம். ஆனால், எங்களுக்கு அடிப்படை ஊதியத்திலேயே முரண்பாடு உள்ளதால் ஓய்வூதியத்தில் முரண்பாடு இருக்கும். எனவே அடிப்படை ஊதியத்தை முறையாக உயர்த்த வேண்டும்'' என்றார்.

திருமாவளவன் வலியுறுத்தல்: இடைநிலை ஆசிரியர்கள் போராட்டம் குறித்து, விசிக தலைவர் திருமாவளவன், செய்தியாளர்களிடம் நேற்று கூறும்போது, ''இடைநிலை ஆசிரியர்களின் ஊதிய முரண்பாடுகளைக்களைந்து, நிலுவைத் தொகையை வழங்க அரசு முன்வர வேண்டும். அதேபோல், தூய்மைப் பணியாளர்களை தனியாரிடம் ஒப்படைக்காமல் அரசு பணியிலேயே நீடிக்கச் செய்ய வேண்டும்.

பெரியாரின் அரசியல் என்பது தன்னலமற்ற அரசியல். பெரியாரை வீழ்த்த நினைக்கும் சக்தி களின் நோக்கம் நிறைவேற சீமானின் அரசியல் ஏதுவாக அமைந்து விடக்கூடாது. விசிகபேசுவது பெரியாரின் அரசியலைத்தான், விளிம்புநிலை மக்களின் முன்னேற்றத்துக்கான அடித்தளம் பெரியாரிய அரசியலே'' என்று கூறினார்.

## சமுத்திர பிரதாப் கப்பல் இந்தியாவின் தன்னம்பிக்கையை அதிகரிக்கும்: ராஜ்நாத் சிங்




பனாஜி, ஜன.6-

கோவா கப்பல் கட்டும் தளத்தில் சமுத்திர பிரதாப் கப்பலை மத்திய பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் நாட்டுக்கு அர்ப்பணித்தார். அவர் இந்த கப்பல் இந்தியாவின் தன்னம்பிக்கையை அதிகரிக்கும் என பேசுகையில் தெரிவித்தார்.

இரண்டு மாசு கட்டுப்பாட்டு கப்பல்களில் முதலாவதாக சமுத்திர பிரதாப் கப்பலை, மத்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், கோவா கப்பல் கட்டும் தளத்தில் நடந்த நிகழ்ச்சியில் இன்று (ஜனவரி 05) மத்திய பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் அர்ப்பணித்தார். இந்திய கடலோர காவல்படைக்காக உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட முதல் மாசு கட்டுப்பாட்டு கப்பல் தான் சமுத்திரா பிரதாப்.

இந்த கப்பலில் பயன்படுத்தப்பட்ட பொருட்களில் 60 சதவீதம் உள்நாட்டை சேர்ந்தவை. இந்த கப்பல் 114. 5 மீட்டர் நீளம், 4,200டன் எடை கொண்டது. 6 ஆயிரம் கடல் மைல் தூரம் வரை செல்லக்கூடியது. இக்கப்பலில் ரசாயன கண்டுபிடிப்பு கருவிகள், தீயணைப்பு கருவிகள் மற்றும் மாசுவை அகற்றும் இதர சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

நிகழ்ச்சியில் ராஜ்நாத் சிங் பேசியதாவது: தொலை நோக்கு பார்வையுடன் இந்திய கடற்படையில் சமுத்தர பிரதாப் கப்பல் இணைக்கப்பட்டு உள்ளது. கடல் வளங்கள் எந்த ஒரு நாட்டிற்கும் சொந்தமானது அல்ல. கடலோர காவல் படையில் பெண்களுக்கு முன்னுரிமை அளித்து அதிகாரம் அளித்ததில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இது எங்களுக்கு பெருமை சேர்க்கும் விஷயமாகும். சமுத்திர பிரதாப் கப்பல் இந்தியாவின் தன்னம்பிக்கையை அதிகரிக்கும்.

இந்த கப்பலை இயக்குவது நமது வலிமையை அதிகரிக்கும். இந்த கப்பல் நமது கூட்டு முயற்சியின் அடையாளம். மாசு கட்டுப்பாட்டை மையமாக கொண்டு வடிவமைக்கப்பட்டு இருக்கிறது. இது இன்றைய சவால்களை எதிர்கொள்ள மிகவும் அவசியம். இவ்வாறு ராஜ்நாத் சிங் பேசினார். நிகழ்ச்சியில் கோவா முதல்வர் பிரமோத் சாவந்த், மத்திய பாதுகாப்பு செயலாளர் ராஜேஷ் குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**present sale for all over Tamil Nadu**

தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது

## கூட்டணி முடிவெடுக்க தினகரனுக்கு முழு அதிகாரம்: அமமுக பொதுக்குழு தீர்மானங்கள் என்னென்ன?



தஞ்சாவூர்: ஜன.6-

தேர்தலில் கூட்டணி அமைப்பது தொடர்பாக முடிவெடுக்கும் முழு அதிகாரமும் டிடிவி தினகரனுக்கு வழங்கப்பட்டுள்ளதாக அம்மா மக்கள் முன்னேற்ற கழக பொதுக்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் பொதுக்குழு கூட்டம் தஞ்சாவூரில் இன்று (ஜன.5) காலை நடைபெற்றது. கூட்டத்துக்கு வந்தவர்களை தஞ்சாவூர் மாநகர செயலாளர் ராஜேஸ்வரன் வரவேற்றார். கூட்டத்தில் பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் சிறப்புரை ஆற்றினார். கூட்டத்தில் துணைப் பொதுச் செயலாளர் எம்.ரங்கசாமி உள்ளிட்ட மாநில நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விவரம்:

› 2026ஆம் ஆண்டு தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் கூட்டணி தொடர்பான அனைத்து முடிவுகளையும் எடுக்க கட்சியின் பொதுச் செயலாளர் டிடிவி தினகரனுக்கு முழு அதிகாரம் வழங்கப்படுகிறது.

› முல்லைப் பெரியாறு, காவிரியில் புதிய அணையை கட்ட முயற்சிக்கும் கர்நாடகம் மற்றும் கேரளா அரசுகளின் முயற்சியை தடுத்து நிறுத்திட திமுக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் .

› வாக்காளர் பட்டியல் திருத்த பணிகள் மூலம் 2026ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் நியாயமானதாகவும், நேர்மையானதாகவும் நடைபெறுவதை உறுதி செய்ய தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

› தமிழகத்துக்கென தனியாக சாதி வாரி கணக்கெடுப்பினை நடத்திட தமிழக அரசின் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

› திமுக ஆட்சியில் ஈர்க்கப்பட்ட முதலீடுகள் மற்றும் உருவாக்கப்பட்ட வேலைவாய்ப்புகள் குறித்து விரிவான அறிக்கையை தமிழக அரசு வெளியிட வேண்டும்.

› பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை சம்பவங்களில் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு உச்சபட்ச தண்டனையை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

› தமிழகத்தில் தொடரும் குற்றச் சம்பவங்களையும் போதைப் பொருட்களின் நடமாட்டத்தையும் இரும்பு கரம் கொண்டு ஒடுக்க தமிழக அரசின் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

› மத்திய அரசின் 100 நாள் வேலை திட்டத்தை மறு பரிசீலனை செய்து திருத்தங்களை மேற்கொள்ள மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

› கோவை மற்றும் மதுரை மாநகரங்களில் மெட்ரோ ரயில் திட்டத்தை செயல்படுத்திட மத்திய மாநில அரசுகள் முன் வர வேண்டும்.

› இலங்கைக்கு தாரைவாக்கப்பட்ட கச்சத்தீவை மீட்டு தமிழக மீனவர்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு காண மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

› வடகிழக்கு பருவமழை மற்றும் டிட்வா புயலால் பாதிப்புக்கு உள்ளான விவசாயிகளுக்கு அறிவிக்கப்பட்ட இழப்பீட்டை அதிகரித்து வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட 18 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## சபரிமலை தங்கம் திருட்டு வழக்கு: 6 வாரங்கள் எஸ்ஐடிக்கு கேரளா ஐகோர்ட் அவகாசம்




சபரிமலை, ஜன.6-

சபரிமலை தங்கம் திருட்டு வழக்கை விசாரிக்க சிறப்பு புலனாய்வு குழுவுக்கு (எஸ்ஐடி) மேலும் 6 வாரங்கள் அவகாசம் வழங்கி கேரள ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.

கேரளாவின் சபரிமலையில் உள்ள புகழ்பெற்ற அய்யப்பன் கோவிலில், 2019ல் புனரமைப்பு பணிகள் நடந்தன. கருவறை முன்பிருந்த துவார பாலகர் சிலைகள் மற்றும் கதவுகளில் பதிக்கப்பட்டிருந்த தங்க கவசங்கள் புதுப்பிக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. தங்க முலாம் பூசப்பட்டு மீண்டும் அணிவிக்கும்போது, துவார பாலகர் சிலைகளின் தங்க கவசத்தில் இருந்து 4 கிலோ தங்கம் மாயமானது தெரியவந்தது. கருவறை கதவுகளில் இருந்தும் தங்கம் திருடப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது.

கைது

கோவிலை நிர்வகிக்கும் திருவிதாங்கூர் தேவசம் போர்டு அளித்த புகாரைத் தொடர்ந்து, போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். கேரள உயர் நீதிமன்ற உத்தரவுபடி அமைக்கப்பட்ட சிறப்பு புலனாய்வு குழு, இது குறித்து விசாரணை நடத்தி வருகிறது. இந்த வழக்கில் தேவசம் போர்டு முன்னாள் தலைவர், நிர்வாக அதிகாரி உட்பட ஒன்பது பேர் கைது செய்யப்பட்டு உள்ளனர்.

விசாரணை

இதற்கிடையே சபரிமலை அய்யப்பன் கோவில் தங்கம், வெளிநாடுகளுக்கு கடத்தப்பட்ருக்கலாம் என சி.பி.ஐ.,க்கு சந்தேகம் எழுந்துள்ளது. இது குறித்து முன்னாள் துபதரக ஊழியர்களிடம் சி.பி.ஐ., அதிகாரிகள் விசாரணையை துவக்கி உள்ளனர். இந்நிலையில் இந்த வழக்கு இன்று (ஜனவரி 05) விசாரணைக்கு வந்தது. அப்போது வழக்கு விசாரணையை கேரளா ஐகோர்ட் நீதிபதிகள் ராஜா விஜயராகவன், ஜெயக்குமார் ஆகியோர் அடங்கிய அமர்வு 2 வாரங்களுக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டது.

அவகாசம்மேலும், வழக்கை விசாரிக்க சிறப்பு புலனாய்வு குழுவுக்கு (எஸ்ஐடி) மேலும் 6 வாரங்கள் நீதிபதிகள் அவகாசம் வழங்கினர். ஏற்கனவே வரும் ஜனவரி 19ம் தேதி சிறப்பு புலனாய்வு குழு இடைக்கால அறிக்கை தாக்கல் செய்ய கேரளா ஐகோர்ட் உத்தரவிட்டு இருந்தது குறிப்பிடத்தக்கது.

## குடிநீரில் கழிவுநீர் கலந்த விவகாரம்: இந்தூரில் புதிதாக 20 பேருக்கு வயிற்றுப்போக்கு



இந்தூர். ஜன.6-

மத்தியப் பிரதேசத்தின் இந்தூரில் கழிவுநீர் கலந்த குடிநீரை குடித்ததால் நூற்றுக்கணக்கானோர் பாதிக்கப்பட்ட நிலையில், புதிதாக மேலும் 20 பேர் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தூர் மாநகரின் பகீரத்புரா பகுதியில் கழிவுநீர் கலந்த குடிநீரைக் குடித்ததால் நூற்றுக்கணக்கானோர் பாதிக்கப்பட்டனர். இதையடுத்து, அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து தெரிவித்த அதிகாரிகள், ''பகீரத்புரா பகுதியில் அசுத்தமான குடிநீரை குடித்ததால் வயிற்றுப்போக்கு ஏற்பட்டு 398 பேர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் 256 பேர் குணமடைந்து வீடு திரும்பினர். 142 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் 11 பேர் தீவிர சிகிச்சைப் பிரவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதுவரை 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

நோய்த்தொற்று ஏற்பட்ட பகிரத்புராவில் சுகாதார ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2,354 குடும்பங்களைச் சேர்ந்த 9,416 பேர் பரிசோதிக்கப்பட்டதில், அவர்களில் 20 பேருக்கு நோய்த்தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. நோய் பரவல் தற்போது கட்டுக்குள் உள்ளது'' என தெரிவித்தார்.

மாவட்ட நிர்வாகம் 6 பேர் உயிரிழந்திருப்பதாக கூறி வரும் நிலையில், இந்தூர் மேயர் புஷ்யமித்ரா பார்கவா 10 பேர் உயிரிழந்திருப்பதாகத் தெரிவித்துள்ளார். உள்ளூர் மக்களோ 16 பேர் உயிரிழந்திருப்பதாகக் கூறுகின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பாக செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு இந்தூரைச் சேர்ந்த மாநில அமைச்சர் விஜய்வர்க்கியா, முட்டாள்தனமாக கேள்வி கேட்கக்கூடாது எனக் கூறியது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய மாநில காங்கிரஸ் தலைவர் ஜிது பட்வாரி, ''அசுத்தமான குடிநீர் விநியோகம் காரணமாக 16 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த மரணங்கள் குறித்து நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும். குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை விதிக்கப்பட வேண்டும்.

குடிநீர் குழாய்களில் அசுத்தமான நீர் வருவதாக பகீரத்புரா மக்கள் கடந்த 8 மாதங்களாக புகார் கூறி வருகின்றனர். ஆனால், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இது குறித்து கேள்வி எழுப்பிய செய்தியாளர்களை மாநில அமைச்சர் அநாகரிகமாகப் பேசி இருக்கிறார். அவர் தனது பதவியை ராஜினாமா செய்ய வேண்டும். இல்லாவிட்டால் முதல்வர் அவரை பதவி நீக்கம் செய்ய வேண்டும். காங்கிரஸ் கட்சியின் இந்த கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் வரும் 11ம் தேதி போராட்டம் நடத்தப்படும்'' என தெரிவித்துள்ளார்.

இதனிடையே, குடிநீர் தொற்று குறித்து ஆய்வு செய்ய கொல்கத்தாவைச் சேர்ந்த தேசிய பாக்டீரியா தொற்று ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த குழுவினர் இந்தூருக்கு வந்துள்ளனர். அவர்கள், நோய்ப்பரவலைக் கட்டுப்படுத்த சுகாதாரத்துறைக்கு தொழில்நுட்ப ஆதரவை வழங்குவார்கள் என்று மத்தியப் பிரதேச சுகாதார அதிகாரி மாதவ் பிரசாத் ஹாசானி தெரிவித்துள்ளார்.



■ திமுக கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் மாநில மகளிர் அணி செயலாளர் மற்றும் தென் மண்டல பொறுப்பாளருமான கவிஞர் கனிமொழி கருணாநிதி பிறந்தநாளை முன்னிட்டு பெரியார் நூல்களை வழங்கி தென்காசி மாவட்டம் ஆலங்குளம் ஊராட்சி ஒன்றிய குழு தலைவி திவ்யா மணிகண்டன் பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்தார் உடன் தென்காசி தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் ஜெயபாலன் ஆகியோர் உடன் இருந்தனர்.



# எஸ்ஜிஏடிஎஃப் தேசிய தற்காப்பு கலைகள் விளையாட்டு போட்டிகள் மற்றும் பாராட்டு விழா

கோவை, ஜன.06-

கோவை மாவட்டம் மத்திய அரசு இளைஞர்நலம் விளையாட்டுத்துறை அனுமதியுடன் நடைபெற்ற எஸ்ஜிஏ டிஎஃப் தேசிய தற்காப்பு கலைகள் விளையாட்டு போட்டிகள் 2025 பாண்டிச்சேரி மாநிலம் காரைக்கால் ஸ்போர்ட்ஸ் ஸ்டேடியத்தில் கடந்த டிசம்பர் 27, 28 ஆகிய தேதிகளில் நடைபெற்றது.

இப்போட்டியை பாண்டிச்சேரி மாநில அரசின் கூட்டுறவு மற்றும் நுகர்பொருள் துறை அமைச்சர். திருமுருகன் கலந்து கொண்டு போட்டியை துவக்கி வைத்து சிறப்பித்தார்

இதில் கோவை மாவட்டத்திலிருந்து ஜேகேடிசி அகாடமி சார்பில் 129 வீரர் வீராங்கனைகளும் தலைமை பயிற்சியாளர் ஷிஹான் சிரில் வினோத் தலைமையில் 17 நடுவர்கள் கலந்து கொண்டனர்

5 வயது முதல் 25 வயது வரை நடைபெற்ற கராத்தே, சிலம்பம் யோகா, நடனம் ஆகிய போட்டியில் 2500 வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் கலந்து கொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர் இதில் கோவையை சேர்ந்த ஜேகேடிசி அகாடமி மாணவர்கள் 31 வீரர்கள் தங்கப் பதக்கத்தையும் 42வீரர்கள் 2வது பரிசும் 25வீரர்கள் 3வது பரிசும் மொத்தம் 98 பதக்கங்களை வென்று ஒட்டுமொத்த ஓவரால் சாம்பியன்ஷிப் பட்டத்தையும் வென்று சாதனை படைத்துள்ளனர்.

வெற்றி பெற்ற மாணவர்கள் சர்வதேச போட்டிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடதக்கது முதல் பரிசு கிறிஸ் அன்ட்வான் ரோசாரியோ, ஏ.டி. ஸ்ரீவத்சன், எஸ். தர்ஷன், ஜே. கௌஷிக் ராம்,வி. அன்புக்கரசன் 2ம் பரிசு டி.பி. ரித்விக், பி.தக்ஷன், அகில், ஸ்ரேஷ்த் அபிமன்யுன், 3ம் பரிசுபி. சாயாதவ், டி. தேஜல், ஜே. ஜெஸ்லி, சாய் ஃபுல்லா, முகம்மது ஷனாப், எஸ்.சயீத் ஆயாஸ், ஃபயீஸ் ஜாஃபர், எஸ். ரிதிமிகா, டி.பிரின்ஸ் மேத்யூ, எஸ்.கபிலன் உட்பட வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கும் கற்பித்த ஆசிரிய ர்களுக்கும் சௌரி பாளையம் பகுதியில் உள்ள தனியார் கூட்டரங்கில் ஜேகேடிசி பெற்றோர் சங்கத்தின் மூலம் பாராட்டு விழா நடைபெற்றது.

இவ்விழாவில் தலைமை பயிற்சியாளர் மற்றும் பயிற்சியாளர்களுக்கும், மாணவர்களுக்கும் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது நிகழ்ச்சியில் பெற்றோர்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டு வாழ்த்துக்களை தெரிவித்தனர்



# இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

இராமநாதபுரம், ஜன.06-

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொதுமக்களிடம் பல்வேறு கோரிக்கைகள் குறித்த 290 மனுக்கள் பெற்று மனுதாரரின் முன்னிலையில் மனுக்களை விசாரணை செய்து தொடர்புடைய அலுவலர்களிடம் மனுக்களை வழங்கி உரிய நடவடிக்கையினை விரைந்து மேற்கொள்ள அலுவலர் களுக்கு உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில் வீட்டுமனை பட்டா, முதியோர் உதவித்தொகை, தனிநபர் வீடு வழங்கும் திட்டம், குடிநீர் இணைப்பு வழங்குதல் உள்ளிட்டவை தொடர்பாக பொதுமக்கள் மனுக்களை அளித்தனர். மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில், ஒவ்வொரு வாரமும் பொது மக்களிடம் பெறக்கூடிய மனுக்களுக்கு உரிய நடவடிக்கை மேற் கொண்டு ஒருமாத காலத்திற்குள் மனுதாரர்களுக்கு உரிய தீர்வு வழங்கிட வேண்டும் எனவும், தீர்வு வழங்க முடியாத மனுக்கள் நிலை குறித்து மனுதாரர்களிடம் அலுவலர்கள் எடுத்துரைக்க வேண்டும் எனவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும் பொதுமக்கள் வழங்கும் மனுக்களுக்கு துறைசார்ந்த அலுவலர்கள் சிறப்பு கவனம் எடுத்து செயல்பட வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.வ.சங்கரநாராயணன் அவர்கள், மாவட்ட சமூக பாதுகாப்புத்திட்ட தனித்துணை ஆட்சியர் திருமதி.கிருஷ்ணகுமாரி அவர்கள், நேர்முக உதவியாளர் (நிலம்) திரு.ரகுபதி அவர்கள், உதவி ஆணையர் (கலால்) திருமதி.கங்காதேவி அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# விருதுநகர் மாவட்டம்: மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 29.92 இலட்சம் மதிப்பிலான நலத்திட்டத் உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா வழங்கினார்

விருதுநகர், ஜன.06-

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், இலவச வீட்டுமனைப்பட்டா மற்றும் பட்டா மாறுதல், குடும்ப அட்டை, வேலை வாய்ப்பு, விபத்து நிவாரணம், மாற்றுத் திறனாளிகள், நலிந்தோர் நல உதவித்திட்டம் மற்றும் விதவை உதவித்தொகை, திருமண உதவித்தொகை, முதியோர் உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக மனுக்கள் பெறப்பட்டது.

மேலும், மாற்றுத்திறனாளிகள் மற்றும் மூத்தகுடிமக்களுக்காக அமைக்கப்பட்டுள்ள சிறப்பு அமருமிடத்திற்குச் சென்று, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்.



இம்மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் சம்மந்தப்பட்டதுறை அலுவலர்களிடம் ஒப்படைத்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டார்கள்.

மேலும் முதலமைச்சர் தனிப்பிரிவு மனுக்கள் மீது தனிக்கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

இக்கூட்டத்தில், குடும்ப அட்டை வேண்டி விண்ணப்பித்த 4 பயனாளிகளுக்கு மின்னணு குடும்ப அட்டைகளையும்,

பள்ளிக்கல்வித்துறை சார்பில் பல்வேறு விபத்துகளில் தாய் தந்தையரை இழந்த 11 மாணவர்களுக்கு தலா ரூ.75,000/ வீதம் மொத்தம் ரூ.8.25 இலட்சம் மதிப்பிலான விபத்து காப்பீட்டு பத்திரங்களையும்,

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் புதிரை வண்ணார் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள 42 உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு ரூ.6.28 இலட்சம் மதிப்பீட்டில், இயற்கை மரண உதவித்தொகை, ஈமச்சடங்கு உதவித் தொகை, கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை மற்றும் முதியோர் ஓய்வூதியம் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளையும்,

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக்கழகம் (தாட்கோ) சார்பில், சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் (CM-ARAISE) கீழ் 7 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.15.14 இலட்சம் மானியத் தொகையில் ஆட்டோ, கார், டிராக்டர் வாகனங்களையும்

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில், 2 நபர்களுக்கு ரூ.26 ஆயிரம் மதிப்பில் மூன்று சக்கர மிதிவண்டி மற்றும் சக்கர நாற்காலிகளையும் என ஆக மொத்தம் 66 பயனாளிகளுக்கு ரூ.29.92 இலட்சம் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி ஆனந்தி, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திரு.காளிமுத்து, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி பிர்தௌஸ் பாத்திமா, அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ தென்காசி தெற்கு மாவட்டம் பொறுப்பாளர் ஜெயபாலன் தலைமையில் நாடாளுமன்ற குழு தலைவரும் தேர்தல் அறிக்கை குழு தலைவரும் கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆன கவிஞர் கனிமொழி கருணாநிதிக்கு கடையநல்லூர் நகர மன்ற தலைவர் முனைவர் மூப்பன் ஹபீபூர் ரகுமான் அவர்கள் கடையநல்லூர் நகர மக்கள் சார்பாகபுத்தகங்கள் வழங்கி பிறந்தநாள் வாழ்த்துக்கள்தெரிவித்தார்

## தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் தலைமையில் மக்கள் குறைத்தீர்க்கும் நாள்

தென்காசி, ஜன.06-

தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே.கமல்கிஷோர், மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொது மக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடம் கோரிக்கை மனுக்களை பெற்று மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் இலவச வீட்டுமனை பட்டா, முதியோர் உதவித்தொகை, அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தரக்கோருதல், பட்டா மாறுதல், மாற்றுத் திறனாளிகள் உதவித்தொகை மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 487 மனுக்கள் பெறப்பட்டது. பெறப்பட்ட மனுக்கள் தகுதி வாய்ந்த மனுக்களாக உள்ளதா என்பதை விசாரணை செய்து விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரர்களுக்கு உரிய பதில் அளிக்குமாறு சம்பந்தப்பட்ட அனைத்து துறை அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சீ.ஜெயச்சந்திரன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு.முத்துராமலிங்கம் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# பழிக்குப் பழி வாங்க கொலை செய்ய திட்டமிட்டிருந்த 7 பேர் கைது

## வாள், 1 கார், 6 செல்போன் பறிமுதல்

சிவகங்கை, ஜன.6-

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி உட்கோட்டம், காரைக்குடி வடக்கு காவல் நிலைய குற்ற எண். 155/25, U/s. 191(2), 191(3), 126(2), 109(1), and 103(2) of the BNS Act வழக்கு சம்பந்தமாக, காரைக்குடி வடக்கு காவல் நிலைய எல்கைக்குட்பட்ட 100 அடி ரோட்டில் காரைக்குடி சேர்வார் ஊரணியைச் சேர்ந்த மனோ என்ற மனோஜ் குமார் என்பவர், கடந்த 21.3.2025ம் தேதி காரைக்குடி அண்ணாநகர் பகுதியைச் சேர்ந்த குரு பாண்டி மற்றும் சில நபர்களால் வெட்டி கொலை செய்யப்பட்டார். பிறகு, மனோ என்ற மனோஜ்குமார் கொலை சம்பவத்தில் ஈடுபட்ட குரு பாண்டி மற்றும் சில நபர்கள் கைது செய்யப்பட்டு, குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் சிறையில் இருந்து வருகின்றனர்.

மேற்படி சம்பவத்திற்கு பழி தீர்க்கும் விதமாக, மேற்படி இறந்த மனோஜ் குமார் என்பவரின் சகோதரரான காரைக்குடி சேர்வார் ஊரணியை சேர்ந்த குணா மற்றும் ஏழு நபர்கள் பயங்கர ஆயுதங்களுடன் பழிக்குப் பழி கொலை சம்பவத்தில் ஈடுபட திட்டம் தீட்டி தயாராக இருந்த நிலையில், காவல்துறையினருக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி அவர்களை கைது செய்து அவர்களிடம் இருந்து 3 வாள், 1 கார், 6 செல்போன் ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளது. மேலும் இவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட உள்ளனர் என்ற விபரம் இதன்மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

# கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட குடும்ப அரிசி அட்டைத்தாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்புக்கான டோக்கன்கள் வீடுகள்தோறும் விநியோகிக்கப்பட்டு வருகிறது

## மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா டோக்கன் விநியோகிக்கப்படுவதை நேரில் பார்வையிட்டு தகவல்

கன்னியாகுமரி, ஜன.06-

கன்னியாகுமரிமாவட்டம் மேலகிருஷ்ணன்புதூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க நியாயவிலை கடைக்குட்பட்ட பகுதி குடும்ப அட்டைத்தாரர்களுக்கு பொங்கல் பரிசுத்தொகுப்புக்கான டோக்கன்கள் வீடுகள்தோறும் வழங்கி வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் இன்று (05.01.2026) வழங்கி, நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, தெரிவிக்கையில்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொங்கல் திருநாளை தமிழ்நாடு மக்கள் சிறப்பாக கொண்டாட அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கு பொங்கல் பரிசு தொகுப்பாக 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ



சர்க்கரை, முழுக்கரும்பு மற்றும் ரூ.3000/ சேர்த்து வழங்கப்படும் என ஆணை வெளியிட்டுள்ளார்கள்.

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவுத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள 121 கூட்டுறவு நிறுவனங்களின் கீழ் செயல்படும் 581 நியாய விலைக்கடைகள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் கீழ் செயல்படும் 135 நியாய விலைக்கடைகள், இதர கூட்டுறவின் கீழ் செயல்படும் 46 நியாய விலைக்கடைகள், சுயஉதவிக்குழுவால் நடத்தப்படும் 3 நியாய விலைக்கடைகள் என மொத்தம் 765 நியாய விலைக்கடைகளில் இணைக்கப்பட்டுள்ள 5,79,667 அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் 406 இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்ப அட்டைதாரர்கள் சேர்த்து 580073 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கப்பட உள்ளது.

பொங்கல் பரிசுத் தொகுப்பில் வழங்கப்பட உள்ள பச்சரிசி, சர்க்கரை ஆகியவை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளிலிருந்து நியாய விலைக்கடைகளுக்கு நகர்வு செய்யப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. கரும்பு கொள்முதல் செய்ய கூட்டுறவுத்துறை மற்றும் வேளாண்மைத்துறை அலுவலர்களைக் கொண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் வட்டார அளவிலான குழுக்கள் அமைக்கப்பட்டு அக்குழுக்கள் அண்டை மாவட்டமான மதுரையில் கரும்பு விளைவிக்கப்படும் இடங்களுக்கு சென்று விவசாயிகளிடமிருந்து நேரடியாக கரும்பு கொள்முதல் செய்து நியாய விலைக்கடைகளுக்கு அனுப்பப்பட்டு வருகிறது.

குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு 08.01.2026 முதல் வழங்கப்பட உள்ள நிலையில் தற்போது குடும்ப அட்டைதாரர்களின் வீடுகள்தோறும் நேரிடையாக சென்று டோக்கன் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது.


அதன்ஒருபகுதியாக இன்று, மேலகிருஷ்ணன்புதூர் பகுதியில் பொங்கல் பரிசுத்தொகுப்பு குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படுவதற்கு கொள்முதல் செய்யப்பட்ட கரும்புகள் நியாயவிலைக்கடைகளுக்கு அனுப்பப்பட்டு வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ந்து மேலகிருஷ்ணன்புதூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க நியாய விலை கடைக்குட்பட்ட பகுதி பொதுமக்களுக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்குவதற்கு டோக்கன் வழங்கப்பட்டு வருவதையும் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் வீடு வீடாக சென்று குடிமைப்பொருட்களுடன் பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கப்பட்டு வருவதையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா தெரிவித்தார்கள்

# சிவகங்கை மாவட்டம்: "முதல்வரின் காக்கும் கரங்கள்" திட்டத்தின் கீழ் பயனடைந்த முன்னாள் படைவீரர்கள், தமிழ்நாடு முதலமைச்சருக்கு மன நிறைவுடன் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்தனர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்து தரப்பு மக்களின் நலன் காக்கின்ற வகையில், எண்ணற்ற திட்டங்களை தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.





குறிப்பாக நம் தாய் திருநாட்டின் பாதுகாப்பிற்கு அல்லும் பகலும் அயராது பாடுபட்ட முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களை சார்ந்தோர்கள் நலன் காப்பதில் பெரும் பங்கு வகித்து வருகிறார்கள்.

நாம் சுதந்திரக் காற்றை சுவாசிக்க, கொட்டும் மழையிலும், குளிரிலும் தமது இன்னுயிரையும் பொருட்படுத்தாமல், தாய் திருநாட்டிற்காக தங்களது இளம் வயதை இராணுவப் பணியில் கழித்து, பணிக்காலம் நிறைவு பெற்ற, ஓய்வு பெற்ற முன்னாள் படைவீரர்களின் நலன் காக்க, இராணுவப் பணியில் சேரும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு தொகுப்பு



ஊதியம் வழங்குதல்,

படைப் பணியில் போர் மற்றும் போரையொத்த நடவடிக்கைகளில் உயிரிழந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு, முன்னாள் படைவீரர்களுக்கு மறுவேலைவாய்ப்பு அளித்தல், முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கு கல்வி நிறுவனங்களில் இடஒதுக்கீடு போன்ற பல்வேறு திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது.

அதுமட்டுமன்றி, திருமண உதவித்தொகை, புற்றுநோய் நிவாரண நிதியுதவி, மனநலம் குன்றிய குழந்தைகளுக்கான நிதியுதவி, முதியோர் ஓய்வூதியம், மாதாந்திர நிதியுதவி, இரண்டாம் உலகப்போரில் ஈடுபட்ட முன்னாள் படைவீரர்களுக்கான ஆயுட்கால மாதாந்திர நிதியுதவி, ஈமச்சடங்கு நிதியுதவி, வீட்டுக்கடன் மானியம், உடல் வளர்ச்சி குன்றியோர்களுக்கான நிதியுதவி உள்ளிட்ட பல்வேறு வகையான உதவித்தொகைகள் மற்றும் நிதியுதவிகள் முன்னாள் படைவீரர் நலத்துறையின் சார்பில் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், கடந்த 2024 ஆம் ஆண்டு சுதந்திர தின உரையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தாய்நாட்டிற்காகத் தங்களது இளம் வயதை இராணுவப் பணியில் கழித்து, பணிக்காலம் நிறைவு பெற்ற, ஓய்வுபெற்ற முன்னாள் படைவீரர்களது பாதுகாப்பான வாழ்கையை உறுதி செய்திடவும், வாழ்வாதாரத்தை மேம்படுத்திடவும், "முதல்வரின் காக்கும் கரங்கள்" என்ற புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்று அறிவித்தார்கள்.

அதன்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 19.8.2025 அன்று தலைமைச் செயலகத்தில், பொதுத் துறையின் சார்பில் முன்னாள் படைவீரர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திடும் பொருட்டு, "முதல்வரின் காக்கும் கரங்கள்" என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைத்து, 155 முன்னாள் படைவீரர்களுக்கு ரூபாய் 24.43 கோடி மதிப்பீட்டில், 30 சதவீதம் மானியத்துடன் தொழில் தொடங்குவதற்கான ஒப்புதல் ஆணைகளை வழங்கினார்.

"முதல்வரின் காக்கும் கரங்கள்" திட்டத்தின் கீழ், முன்னாள் படைவீரர்கள் பல்வேறு தொழில் தொடங்கி பயன்பெறும் வகையில், ஒரு கோடி ரூபாய் வரை வங்கிகள் மூலம் கடன் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் தொடங்கப்படும் தொழில்களுக்கு வழங்கப்படும் கடன் தொகையில், 30 விழுக்காடு மூலதன மானியமும், 3 விழுக்காடு வட்டி மானியமும் முன்னாள் படைவீரர் நலத்துறையின் சார்பில் வழங்கப்படும். மேலும், முன்னாள் படைவீரர்கள் சுயதொழிலில் ஈடுபடவும் மற்றும் சிறந்த தொழில் முனைவோர்களாக மாற்றிட தேவையான நிதி மற்றும் பயிற்சிகளும் தமிழக அரசின் சார்பில் வழங்கப்படுகிறது.

கடந்த 19.8.2025 அன்று சென்னையில் நடைபெற்ற அரசு விழாவில், சிவகங்கை மாவட்டத்தைச் சார்ந்த 10 முன்னாள் படைவீரர்கள் / அவர்தம் சார்ந்தோர்களுக்கு தொழில் தொடங்கி பயன்பெறும் வகையில், ரூபாய் 1 கோடி 13 இலட்சம் மதிப்பீட்டிலான தொழில் முனைவோர் வங்கிக் கடனுதவிக்கான ஒப்புதல் ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி, சிறப்பித்துள்ளார்கள்.



அந்த வகையில், சிவகங்கை மாவட்டத்தைச் சார்ந்த 20 முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் சார்ந்தோர்கள் ரூபாய் 3,43,79,723/ மதிப்பீட்டிலான மூலதனத்தில் தொழில் தொடங்குவதற்கு வங்கிக் கடன்கள் பெற்ற நிலையில், அவர்களுக்கு ரூபாய் 1,21,04,537/ மதிப்பீட்டிலான மூலதன மானியமும், வட்டி மானியமும் முன்னாள் படைவீரர்கள் நலத்துறையின் சார்பில் வழங்கப்பட்டுள்ளது.

முதல்வரின் காக்கும் கரங்கள் திட்டத்தின் கீழ் சுயதொழில் தொடங்குவதற்கு, தொழிற்கடனுக்கான மூலதன மானியம் பெற்று பயனடைந்த சிவகங்கை வட்டத்திற்குட்பட்ட முன்னாள் படைவீரர் திரு.ஸ்ரீனிவாசன் அவர்கள் தெரிவிக்கையில்,

எனது பெயர் ஸ்ரீனிவாசன். நான் இராணுவத்தில் Havildar ஆக 17 வருடம் 11 மாதங்கள் பணிபுரிந்து, கடந்த 30.06.2019 அன்று விருப்ப ஓய்வு பெற்றேன். ஓய்வு பெற்ற பிறகு, எனக்கு தெரிந்த சிறிய வேலைகள் மற்றும் கிடைத்த




சிறிய வேலைகளை செய்து எனது குடும்ப தேவைகளை பூர்த்தி செய்து வந்தேன். மாதந்தோறும் கிடைக்கும் ஓய்வூதியம் மற்றும் அவ்வப்போது கிடைக்கும் வேலைகளைச் செய்து பெறும் வருமானம் எனது தேவைகளுக்கும், எனது குடும்பத்தாரின் தேவைகளுக்கும் போதுமானதாக இல்லை.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், என்னைப் போன்ற முன்னாள் படைவீரர்கள் மற்றும் படைவீரர்களைச் சார்ந்தோர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்திடும் நோக்கில் அறிவிக்கப்பட்ட "முதல்வரின் காக்கும் கரங்கள்" திட்டம் குறித்து அறிந்தேன். முன்னாள் படைவீரர் நல அலுவலகம் வாயிலாக முதல்வரின் காக்கும் கரங்கள் திட்டத்தின் கீழ் சுயதொழில் தொடங்குவதற்கு ரூபாய் ஒரு கோடி வரை வங்கிக் கடன் பெறலாம் எனவும், அதில் மூலதன மானியம் மற்றும் வட்டி மானியமும் வழங்கப்படும் என்பதையும் அறிந்தேன்.

அக்கடனுதவியினை பெற்று, எலக்டிரிக் ஸ்கூட்டர் விற்பனை நிலையம் தொடங்குவதற்கு முடிவு செய்தேன். எலக்டிரிக் ஸ்கூட்டர் விற்பனை நிலையம் அமைப்பதற்கு ரூ.78,31,058/ செலவீனம் ஆகும் என்பதை அறிந்து, முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தை அணுகி "முதல்வரின் காக்கும் கரங்கள்" திட்டத்தின் கீழ் விண்ணப்பித்து, ரூ.50,90,188/ மதிப்பீட்டில் வங்கியில் கடனுதவியாகவும், ரூ.23,49,317/ மதிப்பீட்டில் முன்னாள் படைவீரர் நல துறையிலிருந்து மூலதன மானியமுமாக பெற்று, எலக்டிரிக் ஸ்கூட்டர் விற்பனை நிலையத்தை 5.10.2025 அன்று சிவகங்கை, காளவாசல் பகுதியில் தொடங்கினேன்.மேலும், எனது விற்பனை நிலையத்தில் எட்டு நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்திடும் வகையிலும் எனது வாழ்வாதாரம் மேம்படும் வகையிலும், வாழ்வில் சிறப்படைந்துள்ளேன்.

இவ்வாறாக, முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் சார்ந்தோர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திடும் பொருட்டு, தொலைநோக்கு பார்வையுடன் சிந்தித்து, "முதல்வரின் காக்கும் கரங்கள்" திட்டத்தினை செயல்படுத்திய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது சார்பிலும் என்னைப் போன்ற முன்னாள் படைவீரர்கள் சார்பிலும் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன் என மனநிறைவுடன் முன்னாள் படைவீரர் திரு.ஸ்ரீனிவாசன் அவர்கள் தெரிவித்தார்.

முதல்வரின் காக்கும் கரங்கள் திட்டத்தின் கீழ் சுயதொழில் தொடங்குவதற்கு, தொழிற்கடனுக்கான மூலதன மானியம் பெற்று பயனடைந்த காரைக்குடி வட்டத்திற்குட்பட்ட முன்னாள் படைவீரர் திரு.அமலன் சவரிமுத்து அவர்கள் தெரிவிக்கையில்,

எனது பெயர் A.அமலன்




சவரிமுத்து. நான் Havildar ஆக இராணுவத்தில் மெட்ராஸ் ரெஜிமெண்டில் 16 வருடங்கள் பணிபுரிந்தேன். கடந்த 01.01.2008 அன்று பணியிலிருந்து விடுவிக்கப்பட்டேன். பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட பிறகு பல அரசு மற்றும் அரசு சார்ந்த பணிகளுக்கான போட்டித் தேர்வுகள் எழுதியும் எந்த வேலையும் கிடைக்கப் பெறவில்லை.

எனக்கு மாதாந்திரம் கிடைக்கப்பெறும் ஓய்வூதியத்தின் மூலமாகவே எனது குடும்பத் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்து வந்தேன். இராணுவத்திலிருந்து பணி நிறைவு பெற்று வந்தவுடன் சுய தொழில் தொடங்க வேண்டும் என்பது எனது நீண்ட நாள் கனவாக இருந்த நிலையில், அதற்குரிய மூலதனத்தை ஏற்படுத்துவதில் மிகுந்த சிரமம் அடைந்து வந்தேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் சார்ந்தோர்களின் நலனில் அக்கறை கொண்டு தொடங்கப்பட்ட "முதல்வரின் காக்கும் கரங்கள்" திட்டம் குறித்து அறிந்தேன். இன்றைய கால சூழ்நிலைக்கு ஏற்றவாறான தொழில் குறித்து சிந்தித்து, UPVC கதவு மற்றும் ஜன்னல் தயாரிக்கும் தொழிற்கூடம் அமைக்கலாம் என முடிவு செய்து, தொழில் தொடங்குவதற்கு மொத்தம் ரூ.14,98,600/ தொகை தேவைப்படும் என்பதையும் அறிந்து கொண்டு, ரூ.9,74,000/ தொகை வங்கியிலிருந்து கடனாகவும், ரூ.3,58,521/ தொகை மூலதன மானியமாகவும் முன்னாள் படைவீரர் நல துறையிலிருந்து முதல்வரின் காக்கும் கரங்கள் திட்டத்தின் கீழ் பெற்றேன்.

அதனைத்தொடர்ந்து, காரைக்குடி வட்டத்திற்குட்பட்ட தேவகோட்டை ரஸ்தா பகுதியில் UPVC கதவு மற்றும் ஜன்னல் தயாரிக்கும் தொழிற்கூடம் அமைத்து, கடந்த 17.11.2025 அன்று முதல் தொழிலை தொடங்கி நடத்தி வருகிறேன். தற்போது, நான் மட்டுமன்றி எனது குடும்பத்தினரும் மிகுந்த மகிழ்ச்சியுடன் உள்ளோம். இத்தொழிலினை சிறப்பாக நடத்தி, எங்களது வாழ்வாதாரத்தின் மேம்பாட்டிற்கு அடிப்படையாக இதனை பயன்படுத்திக் கொண்டு வாழ்வில் சிறந்து விளங்குவேன்.

எங்களது வாழ்வில் முன்னேற்றத்திற்கு வழிவகை ஏற்படுத்தி தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எங்களது குடும்பத்தின் சார்பில் எனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம் என முன்னாள் படைவீரர் திரு.அமலன் சவரிமுத்து அவர்கள் தெரிவித்தார்.

::தொகுப்பு::
**மு.ராஜசெல்வன்**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
சிவகங்கை மாவட்டம்.

# அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் பொன்குமார் முன்னிலையில் வீட்டு வசதி திட்டம் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது

சேலம், ஜன.06-

சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைச்சர் இரா. இராஜேந்திரன் அவர்கள் தலைமையில், தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் திரு.பொன்குமார் அவர்கள் முன்னிலையில் தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் திரு.பொன்குமார் அவர்கள் முன்னிலையில் வீட்டு வசதி திட்டம் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.இரா. இராஜேந்திரன் அவர்கள் பேசியதாவது :

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொரோனா பெருந்தொற்று கடுமையாக இருந்த காலகட்டத்தில் பொறுப்பேற்று தனது திறமையால் சிறப்பான ஆட்சியை மேற்கொண்டு வருகிறார்கள். உழைக்கும் மக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எல்லோருக்கும் எல்லாம் என்ற அடிப்படையில் அனைத்து தரப்பு மக்களுக்கும் அனைத்து நன்மைகளும் கிடைக்க வேண்டும் என்று திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறார்கள்.

குறிப்பாக மகளிர், மாற்றுத்திறனாளிகள், முதியோர் ஆகிய அனைத்து தரப்பு மக்களுக்கு அரசின் திட்டங்கள் அனைத்தும் நேரடியாக சென்றடையும் வகையில் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதன் தொடர்ச்சியாக உடல் உழைப்பு தொழிலாளர்கள் மேல் மிகுந்த அக்கறை கொண்டு தொழிலாளர்களுக்கு கல்வி, திருமணம், மகப்பேறு, விபத்து மரணம், ஓய்வூதியம் என அனைத்தையும் உயர்த்தி வழங்கி அவர்களை கை தூக்கி விடும் அரசாக சிறப்பாக செயல்பட்டு வருகிறார்கள்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொழிலாளர்களுக்கு வழங்கி வரும் அனைத்து திட்டங்களையும் அவர்களுக்கு சேர்க்கும் வகையில் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வரும் தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் திரு.பொன்குமார் அவர்களுக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் நடைபெற்று வரும் இந்நிகழ்ச்சியின் வாயிலாக தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் சார்பில் 3024 பயனாளிகளுக்கு ரூ.1.08 கோடி மதிப்பீட்டில் கல்வி உதவித்தொகை, 109 பயனாளிகளுக்கு ரூ.20.41 இலட்சம் மதிப்பீட்டில் திருமண உதவித்தொகை, 6 பயனாளிகளுக்கு ரூ.4500 மதிப்பீட்டில் கண்கண்ணாடி, 1 பயனாளிக்கு மாதந்தோறும் ரூ.1200 வழங்கும் ஓய்வூதியம், 8 பயனாளிகளுக்கு இயற்கை மரண உதவித்தொகையாக ரூ.2.80 இலட்சம், 1 பயனாளிக்கு விபத்து மரண உதவித்தொகையாக ரூ.2.05 இலட்சம், வீட்டு வசதி திட்டத்தின் கீழ் (எல்டைப்) 16 பயனாளிகளுக்கு ரூ.64 இலட்சம் மதிப்பீட்டில் வீடுகள் கட்டிக்கொள்ள உதவித்தொகையும், வீட்டு வசதி திட்டத்தின் கீழ் (எம்டைப்) 20 பயனாளிகளுக்கு ரூ.29.11 இலட்சம் மதிப்பீட்டில் 20 பயனாளிகளுக்கு வீடுகளும் என மொத்தம் 3185 பயனாளிகளுக்கு ரூ.2.27 கோடி மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. நலத்திட்ட உதவிகளை பெற்றுள்ள பயனாளிகள் தங்கள் வாழ்வில் மென்மேலும் உயர எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.இரா.இராஜேந்திரன் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் திரு.பொன்குமார் அவர்கள் பேசியதாவது :

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டப்பேரவையில் 10,000 கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ஆண்டுதோறும் வீடுகள் வழங்கும் திட்டத்தினை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். கட்டுமான தொழிலாளர்களுக்கு கடந்த 5 ஆண்டுகளில் ரூ.3000 கோடிக்கு மேல் நலத்திட்டங்களை வழங்கியுள்ளார்கள். மேலும் பல புதிய திட்டப்பணிகளையும் செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக திருமண நிதியுதவி ரூ.5,000 இருந்து ரூ.20,000 ஆகவும், மகப்பேறு உதவித்தொகை ரூ.6,000 இருந்து ரூ.18,000 வரையிலும், விபத்து மரண உதவித்தொகையாக ரூ.8,00,000 உயர்த்தி வழங்கியதுடன் கல்வி உதவித்தொகை 6ம் வகுப்பு முதல் வழங்கி வருகிறார்கள்.

இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக வீடு கட்டும் தொழிலாளர்களுக்கு கட்டாயம் சொந்த வீடு இருக்க வேண்டும் என்ற உயரிய நோக்கில் சொந்தமாக மனை வைத்திருந்தால் வீடு கட்டிக்கொள்ள ரூ.4,00,000 உதவித்தொகையும், சொந்தமாக மனை இல்லாதவர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் வீடுகள் வழங்கும் திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள்.

மேலும், கட்டுப்படுத்த முடியாத சர்க்கரை நோய், கேன்சர் உள்ளிட்ட நோய்களால் பாதிக்கப்பட்ட கட்டுமானத் தொழிலார்களுக்கு ரூ.12,000, ஓய்வு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியமாக ரூ.1200 வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொங்கல் பண்டிகையை சிறப்பாக கொண்டாட குடும்ப அட்டைதார்களுக்கு ரூ.3,000 வழங்கப்படும் என அறிவித்திருக்கிறார்கள்.

இவ்வாறாக கட்டுமானத் தொழிலாளர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை செயல்படுத்தியுள்ளார்கள் மேலும், தேவைப்படும் அனைத்து உதவிகளையும் செய்திடவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தயாராக உள்ளார்கள். இவ்வாறு தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் திரு.பொன்குமார் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, தொழிலாளர் உதவி ஆணையர்கள் திரு.சண்பகராமன் (சமரசம்), திரு.திருநந்தன் (அமலாக்கம்) உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள், பயனாளிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



## பித்தப்பை கற்களை அறுவை சிகிச்சை இன்றி கரைக்கும் சிறந்த மருத்துவ சேவைக்காக விருது

வேலூர், ஜன.06-

ஆரோக்கிய கிளினிக் நிர்வாகியும், ஹோமியோபதி மருத்து வருமான வி.ஆர்.சுதாகர், பித்தப்பை கற்களை அறுவை சிகிச்சை இன்றி கரைக்கும் சிறந்த மருத்துவ சேவைக்காக விருது வழங்கி கவுரவிக்கப்பட்டார்.

இங்கிலாந்து நாட்டின் பார்லிமென்ட்டான லண்டன் ஹவுஸ் ஆப் லார்ட் ஸில் நடந்த ‘ஸி லீடர்ஷிப் சம்மிட் நிகழ்வில்’ இந்த விருது வழங்கப்பட்டது.

இவ்விழாவில் பார்லிமென்டின் முக்கிய அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு, சமூகத்திற்கு பயனுள்ள சேவைகளை மனப்பூர்வமாக வழங்கி வரும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த சிறப்புமிக்க வல்லுநர்களை தேர்ந்தெடுத்து விருதுகள் வழங்கினர்.

அந்த அடிப்படை யில், வேலூரைச் சேர்ந்த டாக்டர் வி.ஆர்.சுதாகர் கடந்த பல ஆண்டுகளாக பித்தப்பை கற்களுக்கு அறுவை சிகிச்சை இல்லாமல் ஹோமியோபதி மருத்துவத்தின் மூலம் சிகிச்சை அளித்து வருவதும், அதன் மூலம் பல்லாயிரக்கணக்கான நோயாளிகள் நன்மை பெற்றுள்ளதும் கருத்தில் கொண்டு இந்த விருது வழங்கப்பட்டது.

குறிப்பிடத்தக்க வகையில், டாக்டர் சுதாகர் ஏற்கனவே கிட்னி கற்களுக்கான சிகிச்சை முறை களில் 2 உலக சாதனைகளை பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் பெற்றுள்ள இந்த சர்வதேச விருது, ஹோமியோபதி மருத்துவ துறைக்கு பெருமையாக கருதப்படுகிறது.

## தாராபுரத்தில் த.வெ.க செயல்வீரர் கூட்டம், செங்கோட்டையன் பங்கேற்பு: 2026ல் விஜய் முதலமைச்சர், அவரை ஏற்றுக்கொள்பவர்களுடன் மட்டுமே கூட்டணி - செங்கோட்டையன் பேச்சு

திருப்பூர், ஜன.06-

திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் தமிழக வெற்றிக் கழகத்தின் (த.வெ.க) தாராபுரம் - காங்கேயம் திருப்பூர் கிழக்கு மாவட்ட செயல்வீரர் கூட்டம், உடுமலை சாலையில் உள்ள அரிமா அரங்கில் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு மாவட்ட செயலாளர் யுவராஜ் மகேஷ் தலைமை வகித்தார். இதில் முன்னாள் அமைச்சரும், த.வெ.க மாநில நிர்வாகக் குழு தலைமை ஒருங்கிணைப்பாளருமான கே.ஏ. செங்கோட்டையன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார்.




நேற்று இரவு 7 மணியளவில் தாராபுரம் நஞ்சியம்பாளையம் பகுதியில் த.வெ.க வடக்கு ஒன்றிய செயலாளர் ஸ்ரீகாந்த் தலைமையில் செங்கோட்டையனுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. பெண்கள் ஆரத்தி எடுத்து, பட்டாசு வெடித்து வரவேற்றனர். இதனால் சாலை முழுவதும் தொண்டர்கள் திரண்டதால், சில நேரம் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து வடதாரை, காமராஜபுரம், அண்ணா சிலை அலங்கியம் ரோடு, பெரிய காளியம்மன் கோவில் அருகே உள்ளிட்ட பகுதிகளில் தொண்டர்கள் வரவேற்பு அளித்தனர். அப்போது அம்பேத்கர் வேடமணிந்து வந்த த.வெ.க தொண்டர் ராஜா, செங்கோட்டையனுக்கு சால்வை அணிவித்து புத்தகம் வழங்கினார்.

இரவு 8.30 மணியளவில் அரிமா அரங்கிற்கு வந்த செங்கோட்டையனுக்கு தொண்டர்கள் பட்டாசு வெடித்து உற்சாக வரவேற்பு அளித்தனர். ஒரு கட்டத்தில் பட்டாசு பெட்டியை தூக்கிக்கொண்டு ஓடியதால், பட்டாசுகள் வானில் வெடித்து சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. இதனால் உடுமலை ரூ- தாராபுரம் சாலையில் தற்காலிக போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

அரங்கத்திற்குள் நுழைந்த செங்கோட்டையனை பெண்கள் ஆரத்தி எடுத்து, மலர் தூவி வரவேற்றனர். கூட்ட நெரிசல் காரணமாக அவர் உள்ளே செல்வதில் சிரமம் ஏற்பட்டதால், சற்று நேரம் நாற்காலியில் அமர்ந்து ஓய்வு எடுத்துக் கொண்டார். பின்னர் தொண்டர்கள் ஆட்டம், விசில், கோஷம் எழுப்பி அரங்கத்தை உற்சாகத்தில் மூழ்கடித்தனர். அதன் பின்னர் த.வெ.க உறுதிமொழி எடுத்துக்கொள்ளப்பட்டது.

மேடையில் பேசிய செங்கோட்டையன், “தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் இன்று பெண்கள், இளைஞர்கள், படித்தவர்கள் என அனைத்து தரப்பினராலும் விரும்பப்படும் தலைவராக உருவெடுத்துள்ளார். மலேசியாவில் நடைபெற்ற ‘ஜனநாயகன்’ திரைப்பட இசை வெளியீட்டு விழாவில் விஜய்க்கு கிடைத்த வரவேற்பு உலக நாடுகளையே திரும்பிப் பார்க்க வைத்தது. 1972ல் எம்.ஜி.ஆர், 1988ல் ஜெயலலிதாவுக்கு இருந்த மக்கள் ஆதரவு அலையை, இன்று விஜயிடம் பார்க்கிறேன்” என்றார்.

2026 சட்டமன்றத் தேர்தலில் விஜய் தான் தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சர் என்றும், அவரை முதலமைச்சராக ஏற்றுக்கொள்ளும் கட்சிகளுடன் மட்டுமே த.வெ.க கூட்டணி அமைக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

“50 ஆண்டுகள் ஒரே இயக்கத்தில் இருந்த நான், தற்போது விஜய்யின் தலைமையிலான த.வெ.க வெற்றிக்காக எனது அரசியல் அனுபவத்தை முழுமையாக பயன்படுத்துவேன்” என்றார்.

ஊழல் குறித்த கேள்விக்கு, “ஆளும் திமுக ஆட்சியும், முன்னாள் அதிமுக ஆட்சியும் ஊழல் விஷயத்தில் பெரிய வித்தியாசம் இல்லை. ஜனநாயகத்தில் மக்களுக்கு நேர்மையான ஆட்சி தேவை. த.வெ.க ஆட்சியில் நேர்மையான நல்லாட்சி வழங்கப்படும்” என்றார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அமைச்சர் சாமிநாதன் கருத்துகளுக்கு பதிலளித்த செங்கோட்டையன்,

“யார் அரசியல் காமெடியன் என்பதை விரைவில் மக்கள் தீர்மானிப்பார்கள்” என தெரிவித்தார்.

வடமாநில தொழிலாளர்கள் தாக்கப்பட்டதாக எழுந்த கேள்விக்கு,

“பெண்களுக்கு முழுமையான பாது காப்பு, வேலை இல்லாத ஆண்களுக்கு இருசக்கர வாகனம் உள்ளிட்ட திட்டங்கள் த.வெ.க ஆட்சியில் செயல்படுத்தப்படும்” என்றார்.

இந்த மாத இறுதிக்குள் தேர்தல் கூட்டணி குறித்து அறிவிப்பு வெளியாகும் என்றும், தாராபுரம் தொகுதி த.வெ.க வெற்றி தொகுதியாக அமையும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

பத்திரிகையாளர்களின் பல்வேறு கேள்விகளுக்கு பதிலளித்த செங்கோட்டையன், த.வெ.க ஆட்சி அமைந்தால் கல்விக் கடன், வேலைவாய்ப்பு, சமூகநீதி உள்ளிட்ட துறைகளில் மாற்றங்கள் கொண்டு வரப்படும் என்றும் தெரிவித்தார்.



காரைக்குடி அருகே உஞ்சனையில் நடைபெற்ற வாஜ்பாய் நூற்றாண்டு விழா,

## மத்திய பாஜக அரசின் சாதனை விளக்கம் மற்றும் 2026 சட்டமன்ற தேர்தலுக்கான பிரச்சாரக்கூட்டம்

காரைக்குடி, ஜன.06-

காரைக்குடி அருகே உஞ்சனையில் நடைபெற்ற வாஜ்பாய் நூற்றாண்டு விழா, மத்திய பாஜக அரசின் சாதனை விளக்கம் மற்றும் 2026 சட்டமன்ற தேர்தலுக்கான பிரச்சாரக்கூட்டம் ஆகியவை நடைபெற்றது.

06.01.2026 சனிக்கிழமை சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகே உஞ்சனையில் வாஜ்பாய் நூற்றாண்டு விழா, மத்திய பாஜக அரசின் சாதனை விளக்க கூட்டம், 2026 ஆண்டு சட்டமன்ற தேர்தலுக்கான பிரச்சார கூட்டம் ஆகியவை சேர்த்து பிரச்சாரக்கூட்டம் நடைபெற்றது. அப்பொழுது பேசிய பாஜக சிவகங்கை மாவட்ட தலைவர் பாண்டித்துரை அவர்கள் 100 நாள் ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தை 125 நாட்களாக உயர்த்தியும், வேலைக்கான சம்பளத்தையும் மத்திய பாஜக அரசு உயர்த்தி வழங்கி உள்ளது. காரைக்குடி ரெயில்வே நிலையத்தை தரம் உயர்த்தி மேம்படுத்தியதற்கு மத்திய அரசுக்கு நன்றி தெரிவித்தார். விரைவில் காரைக்குடி அருகே செட்டிநாட்டில் மத்திய அரசு விமானநிலையத்தை கொண்டு வரும் என்று உறுதி அளிதார்.திமுக ஆட்சியில் காரைக்குடி அருகே உள்ள சிப்காட் செயல்படவே இல்லை. கல்வி வளர்ச்சிக்கு காரைக்குடியில் நல்ல சூழ்நிலை உள்ளது போல,காரைக்குடியில் தொழில் வளர்ச்சியையும் பெரிய அளவில் கொண்டு வர வேண்டும் என பேசினார்.

கண்டதேவி கோவில் தேரோட்டம் நடப்பதற்கு காரணமே பாஜக தான்.

ஆறாவயல் முதல் அரியக்குடி கோவில் வரை உஞ்சனை வழியாக உள்ள சாலையை அகலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

கள்ளிவயல், வெங்களூர் இரண்டு பஞ்சாயத்துக்கும் சிமெண்ட் ரோடு மற்றும் இணைப்பு தார் சாலைகள் அமைத்து தர நடவடிக்கை எடுக்கப்படும்

உஞ்சனையில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டி கட்டப்பட்டு 30 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. எனவே அதனை அகற்றி விட்டு புதியதாக மேல்நிலை நீர்தேக்க தொட்டி கட்டி தர நடவடிக்கை எடுக்கப்படும்

மேலும் உஞ்சனை, வெங்களூர், கள்ளிவயல் பஞ்சாயத்துகளில் குடிநீர் இணைப்பு சரிவர வழங்கப்படவில்லை என்பதாக அறிகிறேன். அதனையும் சரி செய்து தர நடவடிக்கை எடுக்கப்படும்.

30 வருடமாக சிவகங்கை பாராளுமன்ற தொகுதியிலும், காரைக்குடி சட்டமன்ற தொகுதியிலும் காங்கிரஸ் கட்சியை சார்ந்த MLA, MP கள் இருப்பதால் சிவகங்கை மாவட்டமும், காரைக்குடி சட்டமன்ற தொகுதியும் மிகவும் பின்தங்கி உள்ளது.

காங்கிரஸ் கட்சிக்குள் நடக்கும் உட்கட்சி சண்டையால் கண்ணங்குடி ஒன்றியமே பின்தங்கி, வளர்ச்சி இல்லாமல் உள்ளது என்று பேசினார்.

கூட்டத்தில் உஞ்சனை, கள்ளிவயல், வெங்களூர் ஊராட்சிகளை சார்ந்த பாஜக நிர்வாகிகள், பொதுமக்கள் மற்றும் அதிமுக,தமிழர் தேசம் கட்சி,தமிழ் மாநில காங்கிரஸ்,ஃபார்வர்டு பிளாக் கட்சியினர், டாக்டர்.பாரிவேந்தரின் இந்திய ஜனநாயக கட்சி ,இந்து மக்கள் கட்சி,இந்து முன்னணி, தமிழக மக்கள் முன்னேற்ற கழகத்தினர் உட்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்., மேலும் பாஜக சிவகங்கை மாவட்ட தலைவர் பாண்டித்துரை, கண்ணங்குடி ஒன்றிய அமைப்பாளர், கண்ணன், மாநில நிர்வாகிகள் காசிராஜன், ராஜா, செல்வகணபதி, முன்னாள் மாவட்ட பொதுச் செயலாளர் நாகராஜன், மாவட்ட அலுவலக செயலாளர் விநாயகம், மாவட்ட துணை தலைவர் சிவசுப்பிரமணியன், மாவட்ட பொதுச்செயலாளர் கணேசன், சிவகங்கை மாவட்ட ஊடகப்பிரிவு அமைப்பாளர் வி.நாராயணன் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, கிளை நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



■ வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக காயிதே மில்லத் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின்கீழ் வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், பரதராமி கிராமத்தை சார்ந்த ஜாபர் அஹமத் என்ற மாற்றுத்திறனாளிக்கு ரூ.9500/ மதிப்பிலான மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்டோருக்கான சிறப்பு சக்கர நாற்காலியை நேற்று மாவட்ட ஆட்சித்தலைவர் வே.இரா. சுப்புலெட்சுமி, வழங்கினார்.

## சிவகங்கை மாவட்ட ஊர்க்காவல் படை உடற்தகுதித் தேர்வு

சிவகங்கை, ஜன.06-

சிவகங்கை மாவட்ட ஊர்க்காவல் படையில் காலியாக உள்ள 116 (83 ஆண் + 33 பெண்) ஊர்க்காவலர் பணியிடங்களை நிரப்ப 10.10.2025 முதல் 15.10.2025 வரை விண்ணப்பங்கள் பெறப்பட்டு 04.11.2025 அன்று நடைபெற இருந்த தேர்வு நிர்வாக காரணங்களுக்காக தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டிருந்தது. மேற்படி தேர்வானது வருகின்ற 09.01.2026 (வெள்ளி) அன்று சிவகங்கை மாவட்ட ஆயுதப்படை மைதானத்தில், சான்றிதழ் சரிபார்ப்பும் மற்றும் உடற்தகுதித் தேர்வும் நடைபெறும். இத்தேர்வில் அனைத்து விண்ணப்பதாரர்களும் தவறாது கலந்து கொள்ள வேண்டும். உடற்தகுதித் தேர்விற்கு வரும் விண்ணப்பதாரர்கள் அசல் கல்விச் சான்றுகள் மற்றும் அதற்கான நகல்களையும் கண்டிப்பாக கொண்டு வர வேண்டும். சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் அறிவித்துள்ளது..

## மானாமதுரை அருகே வடமாநில தொழிலாளர்கள் தாக்கப்பட்ட சம்பவம் - இருவர் கைது

மானாமதுரை, ஜன.06-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை உட்கோட்டம், திருப்புவனம் காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட மணலூர் கிராமம் அருகே உள்ள மகேஷ் வேல்யூ ப்ரொடக்சன் லிமிடெட் (ரப்பர் பந்து கம்பெனி) நிறுவனத்தில் பணிபுரிந்து வரும் வடமாநில தொழிலாளர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தில் இரண்டு நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த மனோசூரென் (26) மற்றும் சுஷாந்தா தேகுரி (26) ஆகியோர் கடந்த 01.01.2026 அன்று இரவு வைகை ஆற்றுக்குள் இயற்கை உபாதைக்கு சென்ற போது, அங்கு குடிபோதையில் இருந்த அடையாளம் தெரியாத இரண்டு நபர்களுடன் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, அந்த இருவரும் வடமாநில தொழிலாளர்களை தாக்கியதில் அவர்களுக்கு சிறுகாயங்கள் ஏற்பட்டன. தகவல் அறிந்த மானாமதுரை துணைக் காவல் கண்காணிப்பாளர் பார்த்தீபன் மற்றும் பூவந்தி காவல் ஆய்வாளர் வாசிவம் ஆகியோர் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை மேற்கொண்டனர். இதுதொடர்பாக திருப்புவனம் காவல் நிலையத்தில் குற்ற எண் 499/25ன் கீழ் BNS சட்டப் பிரிவுகள் 296(b), 118(1), 351(3) படி வழக்குப் பதிவு செய்யப்பட்டது. காயமடைந்த இருவரும் மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை முடிந்து வீடு திரும்பியுள்ளனர். சம்பவத்தில் ஈடுபட்டவர்களை பிடிக்க தனிப்படை அமைக்கப்பட்ட நிலையில், நேற்று (03.01.2026) இரண்டு நபர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

## காவல்துறை அறிவிப்பு

இளையான்குடி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் பதிவான குற்ற வழக்கு எண் 276/2019 ல் தொடர்புடைய நபருக்கு எதிராக காவல்துறை அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் இந்திய தண்டனைச் சட்டத்தின் 147, 448, 506 (ii) பிரிவுகள் மற்றும் TNPPDL Act பிரிவு 3ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் SC:160/2024 என்ற எண்ணில் விசாரணை நடைபெற்று வருகிறது. விசாரணை முடிவில், சம்பந்தப்பட்ட நபர் கனி @ கனியசேகர் என்பவர், வழக்கில் ஆஜராகாததால் நீதிமன்றம் கைது வாரண்ட் பிறப்பித்தது. இதையடுத்து, காவல்துறையினர் மேற்கொண்ட நடவடிக்கையில், அவரை இன்று 06.01.2026 அன்று கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பை இளையான்குடி காவல் நிலைய காவல் ஆய்வாளர் வெளியிட்டுள்ளார்.




■ மாவட்ட முதன்மை நீதிபதி திருமதி.எஸ்.சமீனா அவர்கள், ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ச.கந்தசாமி இ.ஆ.ப., அவர்கள் இன்று (05.01.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இளைஞர் நீதிக் குழுமத்தை குத்து விளக்கேற்றி வைத்தார்கள். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி.அ.சுஜாதா, குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திருமதி. உமாமகேஸ்வரி உட்பட பலர் உள்ளனர்.

## சிவகங்கையில் துணிகரம்: சிசிடிவி கேமராக்களை செயலிழக்கச் செய்து 100 பவுன் நகை, 3 லட்சம் கொள்ளை

சிவகங்கை, ஜன.06-

சிவகங்கை அருகே நாட்டரசன்கோட்டையில், சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டிருந்த வீட்டிற்குள் புகுந்த மர்ம நபர்கள், 100 பவுன் தங்க நகைகள் மற்றும் 3 லட்சம் ரூபாய் ரொக்கப் பணத்தைக் கொள்ளையடித்துச் சென்ற சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



சம்பவத்தின் பின்னணி:

சிவகங்கை மாவட்டம் கண்டுப்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர் சேகர் (40). இவர் தற்போது சிங்கப்பூரில் பணியாற்றி வருகிறார். இவரது மனைவி அழகு மீனாள் (32), தனது இரு மகள்களுடன் நாட்டரச ன்கோட்டை ராஜாஜி தெருவில் உள்ள ராதாகிருஷ்ணன் என்பவரது வீட்டின் மாடியில் வாடகைக்கு வசித்து வந்தார். வீட்டின் உரிமையாளர் தற்போது சென்னையில் வசித்து வருகிறார்.

பூட்டிய வீட்டில் கைவரிசை:

கடந்த 28 ஆம் தேதி அழகுமீனாள் தனது தாயார் வீடான கண்டரமாணிக்கத்திற்குச் சென்றிருந்தார். இன்று மாலை அவர் வீடு திரும்பிய போது, வீட்டின் கதவு உடைக்கப்பட்டிருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். உள்ளே சென்று பார்த்தபோது, பீரோவில் வைக்கப்பட்டிருந்த:

* 100 பவுன் தங்க நகைகள்

* வெள்ளிப் பொருட்கள்

*3 லட்சம் ரொக்கப் பணம்

ஆகியவை திருடப்பட்டிருப்பது தெரியவந்தது.

போலீஸ் விசாரணை மற்றும் அதிர்ச்சித் தகவல்:

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த சிவகங்கை தாலுகா போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டனர். அந்த வீட்டில் பாதுகாப் புக்காகப் பல இடங்களில் சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டிருந்தன. ஆனால், திருடர்கள் மிகுந்த திட்டமிடலுடன் செயல்பட்டிருப்பது விசாரணையில் அம்பலமானது.

சிசிடிவி முடக்கம்: அங்கிருந்த கேமராக்களில் ஒன்றை மர்ம நபர்கள் கழற்றி கீழே போட்டுவிட்டு, தடையின்றித் திருட்டில் ஈடுபட்டுள்ளனர்.

தடயங்கள் சேகரிப்பு: கைரேகை நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு, வீட்டில் பதிவாகியிருந்த தடயங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

சிசிடிவி கேமராக்கள் இருப்பதை முன்கூட்டியே அறிந்து, தடையின்றித் திருடியுள்ளதால் இது திட்டமிட்ட கொள்ளையாக இருக்கலாம்“ என போலீசார் சந்தேகிக்கின்றனர்.

பரபரப்பான சூழல்:

சிசிடிவி பாதுகாப்பு இருந்தும் இவ்வளவு பெரிய கொள்ளை நடந்திருப்பது அப்பகுதி மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. வெளிநாட்டில் கணவர் ஈட்டிய சம்பாத்தியம் மற்றும் நகைகளை இழந்த குடும்பத்தினர் மிகுந்த சோகத்தில் உள்ளனர். இச்சம்பவம் குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து மர்ம நபர்களைத் தீவிரமாகத் தேடி வருகின்றனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161